தேவர் பிலிம்ஸ்

கன்னித்தாய்

திருமண பரிசு நூல்கள்!

திருமண தம்பதிகளுக்கு	2-00
இன்புற்று வாழ்க	2-00
அன்பு மோதிரம்	2-00
சீர் வரிசை	2-00
இல்லற இன்பம்	2-00

தனிப்பிரதிக்கு ரூ 2-50 ம்
ஐந்திற்கும் ரூ 11/= ம் அனுப்புக.

ஸ்ரீமகள்
மாடர்ன் டிக்ஷனரி

இங் - இங் - தமிழ்
520 பக்கங்கள்
25,000 பதங்கள்
நிறைய பொது விஷயங்கள்
விலை ரூ 3-50
தபாலில் பெற ரூ 4-50 அனுப்புக

ஸ்ரீமகள் கம்பெனி
122, வரதாமுத்தியப்பன் தெரு. சென்னை - 1

கன்னித்தாய்—பாடல்கள்

பாட்டு 1

இயற்றியவர் : பஞ்சு அருணாசலம்

பாடியவர் : பி. சுசீலா

வாயார முத்தம் தந்து வண்ணப் பிள்ளை கொஞ்சுது
மாதுளம் பூவைப்போல காலும் கையும் மின்னுது!...
கந்தன் முருகன் கைவேலைக் கொடுத்தான்!
கங்கை கொண்டவன் மான் தோலைக் கொடுத்தான்!...
அன்னை உமையாள் தமிழ்ப் பாலைக் கொடுத்தாள்!
அல்லி மலர் போல் இந்தப் பிள்ளை பிறந்தாள்!... (வா

அள்ளி அணைத்தால் அன்பு வெள்ளம் பெருகும்
அங்கம் முழுதும் தமிழ்ச் சங்கம் முழங்கும்!
பிஞ்சு முகத்தில் அன்னை நெஞ்சம் மயங்கும்
பிள்ளைச் சிரிப்பைக் கண்டு தெய்வம் வணங்கும்!

பாட்டு 2

இயற்றியவர் : பஞ்சு அருணாசலம்

பாடியவர் : டி. எம். சௌந்தரராஜன்

கேளம்மா! சின்னப் பொண்ணு! கேளு!—உன்
கேள்விக்கு பதிலைச் சொல்வேன் கேளு!
வாழ்விலே வளர்ந்திருக்கிறது நாடு!—ஏழை
வழியை மட்டும் தடுத்து நிக்குது மேடு! மேடு!...
ஏழைப்படும்பாடு—அதில் எழுந்து நிக்குது வீடு—அவன்
இருப்பதுவும் படுப்பதுவும்—குருவி வாழும் கூடு!
இருப்பவங்க கொடுக்கணும்! இல்லாதவங்க எடுக்கணும்
அதைத் தடுப்பவரை மறுப்பவரை சட்டம் போட்டுப் பிடிக்கணும்
தவிதவிக்கிற ஏழைக்காகத் திட்டம் போடணும்!...பொருளை
சரிசமமா பங்கு வைக்கச் சட்டம் போடணும்!
குவியக் குவிய விளைவதெல்லாம் கூறு போடணும்!—ஏழைக்
குடிசைக்குள்ளே பாலும் தேனும் ஆறு ஓடணும்!
சாலையிலே மேடு பள்ளம் வண்டியைத் தடுக்கும்!-நாட்டு
ஜனங்களிலே மேடு பள்ளம் தேசத்தையே கெடுக்கும்!
ஏழை மனம் கோபப்பட்டா என்னென்னமோ நடக்கும்...! அதை
எண்ணிப்பார்த்து நடந்துகொண்டா நிம்மதி கிடைக்கும்

பாட்டு 3

இயற்றியவர் :
பஞ்சு அருணாசலம்

பாடியவர் :
டி. எம். சௌந்தரராஜன்
பி. சுசீலா

பெண் : என்றும் பதினாறு!
வயது பதினாறு!
மனசும் பதினாறு!
அருகில் வா! வா! விளையாடு

ஆண் : என்றும் பதினாறு!
வயது பதினாறு!
மனதும் பதினாறு!
அருகில் வா! வா! விளையாடு!....(என்றும்)

ஆண் : கன்னம் சிவந்தது எதனாலே?
பெண் : உன்-கைகள் கொடுத்த கொடையாலே!
ஆண் : உன்-வண்ணம் மின்னுவதெதனாலே
பெண் : இந்த-வள்ளல் தந்த நினைவாலே!... (என்

ஆண் : உன்-விழிகள் பொங்குவதெதனாலே?
பெண் : இந்த வீரத் திருமகன் வேலாலே!
ஆண் : உன் மொழிகள் கொஞ்சுவதெதனாலே?
பெண் : நீ முன்னே நிற்கும் அழகாலே! (என்றும்

4

இயற்றியவர்:
பஞ்சு அருணாசலம்

பாடியவர்கள்:
டி. எம். சௌந்தரராஜன்-பி. சுசீலா

பெண் : அம்மாடி தூக்கமா?......

ஆண் : ஆமாமா கேக்கணுமா?......

பெண் : ஒரு துணையிருக்கிற நேரத்திலே தூக்கமும் வருமா....

ஆண் : இந்த ஏக்கத்திலே படுத்திருந்தா
தூக்கமும் வருமா?......

பெண் : நேத்து வந்தது நெனைப்பு!—அதை
நெனைக்க நெனைக்க இனிப்பு!—அது
காத்தடிக்கிற வேளையிலே
கனிந்தது யார் பொறுப்பு?...

ஆண் : பாதது சின்னது வயசு! கொஞ்சம்
பழகச் சொன்னது மனசு!—
ஆனா பயமிருக்குது காரணம் இந்தப
பாடம் எனக்குப் புதுசு!—காதல்
பாடம் எனக்குப் புதுசு!
விடிய விடியப் பேசு—உன்
விழியை எடுத்து வீசு!—உன
கைகளில் நான் குடியிருந்தால்
உலகம் எனக்குத் தூசு!

ஆண் : நாலுபேரை அழைப்பேன்!-மண
மாலை ஒன்றைத் தொடுப்பேன்-இந்த
நாட்டுப் பெண்ணை அருகில் வைத்து
நாடகத்தை நடிப்பேன்!

பாட்டு 5

இயற்: பஞ்சு அருணாசலம்   பாடி: சௌந்தரராஜன்-சுசீலா

ஆண் : மானாப் பொறந்தா காட்டுக்கு ராணி
மலராப் பொறந்தா தோட்டத்து ராணி

பெண் : ஆணாப் பொண்ணா பூமியில் பிறந்தா
அல்லும் பகலும் சோதனை தாண்டி! (மானா

ஆண் : ஆண்களுக்குள்ளே மான்களும் உண்டு!
அடித்துத் தின்னும் புலிகளும் உண்டு!

பெண் : பெண்களுக்குள்ளே கிளிகளும் உண்டு!
பெண்ணெனப் பிறந்த பேய்களும் உண்டு! உண்டு!!
மக்களை ஒருவன் மதிப்பது கடமை!
மக்கள் ஒருவனை மதிப்பது பெருமை!
துணையிருந்தால்தான வலிமையும் ஓங்கும்!
துணையில்லாவிடில் திறமையும் தூங்கும்!—தூங்கும்

ஆண் : தூங்கிவிழுந்தவன் நாட்டுக்குப பாரம்!
சும்மா இருப்பவன் வீட்டுக்குப பாரம்!
வரவறியாமல் சிலவிடும் மனிதன்
தாங்கும் பாரம் தனக்கும் பாரம்!—பாரம் (மானாப்

பாட்டு 6

இயற்: பஞ்சு அருணாசலம்   பாடி: தாராபுரம் சுந்தரராஜ
மனோரமா

ஆண் : வாழவிடு!—இல்லே வழியை விடு!—சும்மா
வம்பு பண்ணாதே எலும்பை எண்ணாதே!

வா

பெண் : ஆளைவிடு—என்னைப் போகவிடு!—சும்மா
ஆட்டம் ஆடாதே! நோட்டம் போடாதே!—அட ஆ

ஆண் : அந்தி நேரத்தில் சந்தையோரத்தில்
கூட்டம் போடப் போறேன்!—நீ
தந்த காதலை அந்தக் கூட்டத்தில்
ஏலம் போடப் போறேன்

பெண் : வந்து பாக்கிறேன் அந்த ஏலத்தை
நானும் கேக்கப்போறேன்!—உடல்
வாட்ட சாட்டமா உள்ள மாப்பிள்ளை
ஜோடி சேக்கப் போறேன்!......

(வாழ

ஆண் : அப்பன் காசையே கப்பல் கப்பலா
அள்ளி வீசப் போறேன்!—ஒரு
சிட்டுப் பொண்ணுக்கு பட்டுச் சேலையா
கப்பம் கட்டப் போறேன்!

பெண் : பட்டுச் சேலையைக் கப்பம் கொண்டு வா!
கட்ட நானும் வரேன்!—என்
தங்க மேனியை உந்தன் கையிலே
தாரை வார்த்துத் தாரேன்!......

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1.

கன்னித்தாய்-நடிகர்கள்

புரட்சி நடிகர்

எம். ஜி. ராமச்சந்திரன் ... ஜெயலலிதா

எம். என். நம்பியார் ... கே. ஆர். விஜயா

எஸ். ஏ. அசோகன் ... பி கே. சரஸ்வதி

வி. கே. ராமசாமி ... கே சந்திரகாந்தா

தாய் நாகேஷ் .... மனோரமா

ஜெமினி பாலு .... பேபி சகிலா

எஸ். எம். ராமன் ...

சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பா தேவர்

மற்றும்

தேவர் பிலிம்ஸ் குழுவினர்

கதை வசனம் :

ஆர். கே. சண்முகம்

பாடல்கள் :

பஞ்சு அருணாசலம்

இசையமைப்பு :

"திரை இசைத் திலகம்" கே வி. மஹாதேவன்

டைரக்ஷன்

எம். ஏ. திருமுகம்

ஸ்டுடியோ :

வாஹினி